சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண்.7651/ஆ2/2024 நாள்.09.10.2024

பொருள்: பள்ளிக் கல்வி - பாரத ரத்னா - டாக்டர் A.P.J அப்துல் கலாம் அவர்களின் பிறந்தநாள் அக்டோபர் 15 இளைஞர் எழுச்சி நாள் முன்னிட்டு 15.10.2024 (செவ்வாய்கிழமை) அனைத்து வகை பள்ளிகளில் டாக்டர் A.P.J. அப்துல் கலாம் அவர்களின் வளர்ச்சி திட்டங்கள் / இலக்குகள் குறித்த சொற்பொழிவு மற்றும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள போட்டிகளை 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு - நடத்திட கோருதல்- சார்ந்து.

பார்வை:

1. அரசு துணைச் செயலரின் கடித எண்.1831/GL1(2)/ 2024-2, நாள்.03.10.2024.

2. சென்னை-06, பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (நாட்டுநலப்பணித் திட்டம்) கடித ந.கஎண்.040011/எம்2/இ2/2024, நாள்.07.10.2024.

.....

பார்வை(2) இல் காண் பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (நாட்டுநலப்பணித் திட்டம்) கடிதத்தின்படி, அரசு துணைச் செயலரின் கடிதத்திற்கிணங்க பாரத ரத்னா டாக்டர் A.P.J. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளான அக்டோபர் 15 இளைஞர் எழுச்சி நாளாக கொண்டாடப்பட்டு வருகின்ற நிலையில் இவ்வாண்டு அன்னாரின் பிறந்த நாளை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கு கீழ்காண் கட்டுரை, பேச்சு போட்டிகள் மற்றும் அறிவியல் கண்காட்சி நடத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

| S.no | Events | Date |
|---|---|---|
| 1 | Essay competition and elocution competition at District level for school students in selected science topics | 10.10.2024 |
| 2 | District level Science Exhibition for school students | 10.10.2024 |
| 3 | State level Science Exhibition for school Students | 14.10.2024 and 15.10.2024 |
| 4 | Space Education show at the Birla Planetarium in Chennai for benefit of school students | 14.10.2024 and 15.10.2024 |
| 5 | Youth rally in each District headquarters by the National Service Scheme(NSS)volunteers along college and high school Students | 15.10.2024 |
| 6 | An hour lecture in all schools and colleges, roping in the Headmaster/Headmistress/Teachers /Local Resource Persons on the developmental ideas propounded by late Dr. A.P.J. Abdul Kalam | 15.10.2024 |

எனவே பள்ளி அளவில் மேற்கண்ட போட்டிகளை 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு நடத்தி பள்ளி அளவில் முதலிடம் பெற்றுள்ள மாணவரை கல்வி மாவட்ட அளவிலான போட்டியில் பங்குபெற உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சியினை கீழ்குறிப்பட்டுள்ள அட்டவணையின்படி நடத்திட தெரிவிக்கப்படுகிறது.

Scanned with OKEN Scanner

கல்வி மாவட்ட அளவில் அறிவியல் கண்காட்சி போட்டிக்கான அட்டவணை

| வ. எண். | கல்வி மாவட்டம் | போட்டி விவரம் | பங்குபெறுவோர் | நடைபெறும் இடம் | நடைபெறும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | தென்சென்னை மாவட்டத்திற்குட் பட்ட அனைத்து வகை பள்ளிகள் | அறிவியல் கண்காட்சி | பள்ளி அளவில் முதலிடம் பெற்ற மாணவர் | வித்யோதயா மேல்நிலைப் பள்ளி, தி.நகர், சென்னை-17. | 14.10.2024 |
| 2 | வடசென்னை மாவட்டத்திற்குட் பட்ட அனைத்து வகை பள்ளிகள் | அறிவியல் கண்காட்சி | பள்ளி அளவில் முதலிடம் பெற்ற மாணவர் | பெண்டிக் மேல்நிலைப் பள்ளி, வேப்பேரி, சென்னை-07. | 14.10.2024 |

மேலும் மறைந்த முன்னாள் இந்திய தலைவர் பாரத ரத்னா டாக்டர் A.P.J. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளான 15.10.2024 அன்று இளைஞர் எழுச்சி நாளாக கொண்டாடப்படும் நிலையில் அதனை முன்னிட்டு சிறப்புற அனைத்து வகை பள்ளிகளில் 15.10.2024 (**செவ்வாய்கிழமை**) மறைந்த டாக்டர் A.P.J. அப்துல் கலாம் அவர்களின் வளர்ச்சி திட்டங்கள் / இலக்குகள் குறித்த சொற்பொழிவு மாணவர்களிடையே மேற்கொள்ள அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். போட்டி நடத்தப்பட்ட விவரங்கள் மற்றும் சொற்பொழிவு மேற்கொண்ட விவரங்களை ஆவணப்படுத்தி ஆவண தொகுப்பினை 15.10.2024 அன்றே இவ்வலுவலக ceochennai08@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைத்திட அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

9.10.24

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை.

9/10/2024

பெறுநர்

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவர்கள் , சென்னை மாவட்டம்.
2. அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள், சென்னை மாவட்டம்.

நகல்

1. மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்படுகிறது.
2. கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி.

Scanned with OKEN Scanner